

தஞ்சாவூர் மாவட்ட நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், திருக்காட்டுப்பள்ளி புறவழிச்சாலை மற்றும் (திருக்காட்டுப்பள்ளி செங்கிப்பட்டி) சாலையில் வெண்ணாற்றின் குறுக்கே புதிய உயர்மட்ட பாலம் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கல்லணை செல்லக்கண்ணு, கௌதமன், முருகானந்தம், அருளானந்தசாமி, பேரூர் செயலாளர், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.உஷா ஜெயராமன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டணம் மத்திய ஒன்றியம் எர்ரஅள்ளி ஊராட்சி போத்தாபுரம் கிராமத்தில் 5.13 கோடி மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணியினை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் துவக்கி வைத்தார. நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன், ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி , சரவணன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணி விஜயன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் முருகன் ஒன்றிய சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அபிகவி கோவிந்தராஜ், மத்திய ஒன்றிய பொருளாளர் பிரகாஷ், பேரூராட்சி துணைத் தலைவர் மாலினி மாதையன், மற்றும் ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் .

### அரியலூர் மாவட்டம் ஆண்டிமடத்தில்

# புதிய அரசு விரைவு போக்குவரத்து கழக அல்ட்ரா டீலக்ஸ் பேருந்து!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவங்கி வைத்தார்!

அரியலூர், பிப்.11-

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் பகுதி பொது மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், ஆண்டிமடம் முதல் சென்னை வரை (வழி: ஸ்ரீமுஷ்ணம், விருத்தாசலம்) செல்லும் புதிய அரசு விரைவு போக்குவரத்து கழக Ultra Deluxe பேருந்து சேவையை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆண்டிமடம் பேருந்து நிலையத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, பேருந்தில் ஆண்டிமடத்திலிருந்து கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் வரை பொதுமக்களுடன் பயணம் மேற்கொண்டார்.

ஸ்ரீமுஷ்ணம் சென்றடைந்தபோது பேருந்தை உற்சாகமாக பொதுமக்கள் வரவேற்றனர்.

இதில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் மோகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆர். கலியபெருமாள், ஆண்டிமடம் மேற்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் இரா.செந்தில்குமார் மற்றும் திருமுட்டம் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழக தோழர்கள, அரசு விரைவு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### தருமபுரி போன்ற பின் தங்கிய மாவட்டங்களில் உள்ளூர் வேலைவாய்ப்பினைப் பெருக்கிடும் வகையில்

# எஃகு அமைச்சகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, பிப்.11-

தமிழ்நாட்டில் தருமபுரி போன்ற மாவட்டங்களில் உள்ளூர் வேலைவாய்ப்பினை பெருக்கிடும் வகையில் கீழ்நிலை எஃகு அடிப்படையிலான சிறு,குறு மற்றும் நடுத்தரத் தொழில் குழும நிறுவனங்களை (MSME Clusters) ஊக்குவிக்க ஒன்றிய அரசு பரிசீலனை செய்துள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில்



ஆட்டோ கூறுகள், உற்பத்தி, கட்டுமான பொருள் அலகுகளுக்கென ஒன்றிய அரசின் திட்ட ஆதரவு ஏதேனும் நீட்டிக்கப்பட்டுள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

மலிவு விலையில் எஃகு விநியோகம் இல்லாதது சிறு உற்பத்தி அலகுகளை பாதிக்கின்றதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

ஒன்றிய அரசால் முன்மொழியப்பட்ட எஃகு சிறு,குறு மற்றும் நடுத்தரத் தொழில் குழும நிறுவனங்களுக்கான (MSME) உள்கட்டமைப்பு வசதிகள் சரிவர செய்யப்பட்டுள்ளதா?

தருமபுரி போன்ற பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி கொள்கை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் இரண்டையும் இணைத்து செயல்படுத்த ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்படுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் மாநில எஃகு அமைச்சகத்தின் மாநில அமைச்சர் பூபதிராஜு சீனிவாச வர்மாவிடம் தருமபுரி எம்.பி.வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

### நீலகிரி மாவட்டத்தில்

# தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்ட விரிவாக்கம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – கா.ராமச்சந்திரன் பங்கேற்பு!

நீலகிரி, பிப். 11-

முதலமைச்சர் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம் போளிவாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநகராட்சிகள், பேரூராட்சிகளில் தூய்மைப்பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் விரிவாக்கத்தை தொடங்கி வைத்து உணவு வழங்கியதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் உதகை ஐயப்பன் கோவில் சிறுவர் மன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர்கள் முன்னிலையில், 09.02.2026 அன்று தூய்மைப்பணியாளர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்து, காலை உணவினை வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:**

தூய்மை பணியாளர்கள் தங்களது பணியை அதிகாலையில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உள்ளதால், காலை உணவு அருந்துவதற்கும் ஏதுவாக நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மைப்பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படும் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து, இத்திட்டம் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து இன்றைய தினம் தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, இன்றைய தினம் நீலகிரி மாவட்டத்தில் காலை உணவு திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளில் உதகை நகராட்சியில் உள்ள 224 தூய்மைபணியாளர்களும், குன்னூர் நகராட்சி பகுதியில் உள்ள 179 தூய்மைப்பணியாளர்களும், கோத்தகிரி நகராட்சி பகுதியில் உள்ள 98 தூய்மைப்பணியாளர்களும், கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள 115 தூய்மைப்பணியாளர்களும், நெல்லியாளம் நகராட்சி பகுதியில் உள்ள 97 தூய்மைப்பணியாளர்களும் என மொத்தம் 713 தூய்மைப்பணியாளர்களுக்கும், மற்றும் 10 பேரூராட்சிகளில் அதிகரட்டி பேரூராட்சி பகுதியில் உள்ள 37 தூய்மைப்பணியார்களும், பிக்கட்டி பேரூராட்சி பகுதியில் உள்ள 19 தூய்மைப் பணியார்களும், தேவர் சோலை பேரூராட்சி பகுதியில் உள்ள 45 தூய்மைப் பணியார்களும், உலிக்கல் பேரூராட்சி பகுதியில் உள்ள 29 தூய்மைப்பணியார்களும், ஜெகதளா பேரூராட்சி பகுதியில் உள்ள 56 தூய்மைப்பணியார்களும், கேத்தி பேரூராட்சி பகுதியில் உள்ள 48 தூய்மைப் பணியார்களும், கீழ்க்குந்தா பேரூராட்சி பகுதியில் உள்ள 26 தூய்மைப்பணியார்களும், நடுவட்டம் பேரூராட்சி பகுதியில் உள்ள 22 தூய்மைப்பணியார்களும், ஓவேலி பேரூராட்சி பகுதியில் உள்ள 16 தூய்மைப்பணியார்களும், சோலூர் பேரூராட்சி பகுதியில் உள்ள 24 தூய்மைப் பணியார்களும் என பேரூராட்சிகளில் 322 தூய்மைப் பணியாளர்களுக்கும் ஆக மொத்தம் 1035 தூய்மைப் பணியாளர்களுக்கு திங்கள் கிழமை இட்லி மெதுவடை சாம்பார், செவ்வாய் கிழமை ரவா கிச்சடி, மிளகாய் சட்னி, புதன்கிழமை பொங்கல், சாம்பார், வியாழன் கிழமை ரவா உப்புமா, தேங்காய் சட்னி, வெள்ளிக் கிழமை இட்லி, மெது வடை, சாம்பார், சனிக்கிழமை ரவா பொங்கல், சாம்பார், ஞாயிற்றுக்கிழமை சேமியா கிச்சடி, சாம்பார் போன்ற உணவு வகைகள் வழங்கப்படவுள்ளது என தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், உதகை நகர் மன்ற தலைவர் திருமதி வாணீஸ்வரி, துணைத் தலைவர் ரவிக்குமார், உதகை நகராட்சி ஆணையாளர் கணேசன், திட்டக் குழு உறுப்பினர்கள் ஜார்ஜ், திருமதி விசாலாட்சி விஜயகுமார், தூய்மைப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், கேத்தி பேரூராட்சியில் உள்ள வளம் மீட்பு பூங்கா மையத்தில் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளை, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் பார்வையிட்டார்.


# தஞ்சை மத்திய மாவட்டத்தில் மாநகர, ஒன்றிய பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சை, பிப்.11-

100 நாள் வேலை ரத்து - விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் - நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்த ஒன்றிய பா.ஜ.க அரசையும் - அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க வையும் கண்டித்து தஞ்சை மத்திய மாவட்ட கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக மாவட்ட கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு 100 நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க ஒப்பந்தம், நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழநாட்டு மக்களை வஞ்சித்து, தமிழ்நாட்டு வளர்ச்சியை தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் ஆர்பாட்டம் நாளை (12.02.2026 - வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில் மாநகர, ஒன்றிய, பேரூர்களில் நடைபெறவுள்ளது.



இதில் தஞ்சை மத்திய மாவட்ட இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், கழக உடன் பிறப்புக்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சி தோழர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ள இடங்கள் பின்வருமாறு தஞ்சை மாநகரம் தலைமை தபால் நிலையம் அருகில், தஞ்சை, தஞ்சை தெற்கு - விளார், தஞ்சை மேற்கு - ரெட்டிப் பாளையம், தஞ்சை வடக்கு சிங்கபெருமாள் குளம், மேலவெளி, தஞ்சை கிழக்கு - பிள்ளையார்பட்டி, திருவையாறு தெற்கு அண்ணா சிலை அருகில், கோனேரிராஜபுரம், திருவையாறு வடக்கு விளாங்குடி, திருவையாறு கிழக்கு கண்டியூர், பூதலூர் தெற்கு சானூரப்பட்டி, பூதலூர் வடக்கு பழமாநேரி, பூதலூர் மத்திய நால்ரோடு, பூதலூர், திருவோணம் வடக்கு கடைவீதி, திருவோணம், ஒரத்தநாடு வடக்கு மேல உளூர், ஒரத்தநாடு தெற்கு பாப்பாநாடு, ஒரத்தநாடு மேற்கு பொய்யுண்டார் கோட்டை செல்லம்பட்டி பாலம், ஒரத்தநாடு கிழக்கு ஒக்கநாடு கீழையூர், திருக்காட்டுப்பள்ளி பேரூர் தபால் நிலையம் அருகில், திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு பேரூர் தபால் நிலையம் அருகில், திருவையாறு, மேலத்திருப்பூந்துருத்தி பேரூர் தபால் நிலையம் அருகில், மேலத்திருப்பூந்துருத்தி, வல்லம் பேரூர் தபால் நிலையம் அருகில், வல்லம், ஒரத்தநாடு பேரூர் தபால் நிலையம் அருகில், ஒரத்தநாடு

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.


# ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சை, பிப்.11-

கழக தலைவர், முதல்வர் அவர்களின் அறிவிப்பினை ஏற்று தொடர்ந்து தமிழகத்தை தொடர்ந்து பட்ஜெட்டில் வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தஞ்சை வடக்கு மாவட்டம் மாநகர ஒன்றிய பகுதிகளில் நடைபெற உள்ளது என மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையை வருமாறு: தலைமை கழகம் அறிவித்த படி, தஞ்சை வடக்கு மாவட்ட கழகத்தில், ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து,



தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பாஜக அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அதிமுக வையும் கண்டித்து நாளை (12.02.2026 - வியாழக் கிழமை) காலை 10.30 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாநகர, கழக ஒன்றியங்களில் கீழ் கண்ட விபரபடி நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள். ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட கிளை கழக செயலாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BDA, BLC, மற்றும் கழக உடன்பிறப்புகள் தவறாமல் தங்கள் பகுதியில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடங்களின் விபரம் :-

கும்பகோணம் மாநகரம் காந்தி பூங்கா, கும்பகோணம், கும்பகோணம் மத்தியம் சந்தனாள்புரம் ரவுண்ட்டானா, கொரநாட்டுக்கருப்பூர், கும்பகோணம் மேற்கு சமத்துவபுரம், பம்பப்படையூர், கும்பகோணம் கிழக்குகடைத் தெரு நீலத்தநல்லூர், திருவிடைமருதூர் வடக்கு கடைவீதி, திருநாகேஸ்வரம், திருவிடைமருதூர் தெற்கு கடைவீதி, அய்யாவாடி, திருவிடைமருதூர் கிழக்கு தபால் நிலையம் அருகில், திருபுவனம், திருவிடைமருதூர் மேற்கு கடைவீதி, திருநறையூர், திருப்பனந்தாள் மேற்கு சன்னதி தெரு, திருப்பனந்தாள், திருப்பனந்தாள் கிழக்கு கடைவீதி, பந்தநல்லூர், திருப்பனந்தாள் மத்தியம் கடைவீதி, கதிராமங்கலம், பாபநாசம் வடக்கு தபால் நிலையம் அருகில், கபிஸ்தலம், பாபநாசம் தெற்கு என்.நாசர் கடைவீதி, சரபோஜிராஜபுரம், அம்மாபேட்டை வடக்கு அம்மாபேட்டை பேருந்து நிலையம் அருகில், அம்மாபேட்டை தெற்கு கடைவீதி , சாலியமங்கலம்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# குன்னம் - பெரம்பலூரில் இருந்து புதிய பேருந்து!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், பிப்.11 -

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் குன்னம் மற்றும் பெரம்பலூரில் இருந்து சென்னைக்கு செல்லும் வகையிலான 2 புதிய புறநகர் மிதவைப் பேருந்துகளை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

குன்னத்திலிருந்தும் பெரம்பலூரில் இருந்தும் நேரடியாக சென்னைக்கு செல்வதற்கு அரசு பேருந்து வசதிகளை தேவை என்ற பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில்

பெரம்பலூரில் இருந்து விழுப்புரம் வழியாக தினசரி சென்னை செல்லும் வகையிலான மிதவை பேருந்தை பெரம்பலூர் பேருந்து நிலையத்திலும், குன்னத்திலிருந்து வேப்பூர், ஒகளூர், ஆடுதுறை, லப்பைகுடிகாடு மற்றும் தொழுதூர் வழியாக தினசரி சென்னை செல்லும் மிதவை பேருந்தை குன்னம் பேருந்து நிலையத்திலும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

இதனால் தங்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியதை உணர்ந்து பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்நிகழ்வில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் ஆர். மோகன், துணை மேலாளர் (வணிகம்) ஆர்.மணி, கோட்ட மேலாளர் (திருச்சி) சந்திரசேகர், கிளை மேலாளர் (திருச்சி) கே.வெங்கடேசன்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ம.ராஜ்குமார் மற்றும் போக்குவரத்துக் கழக பணியாளர்கள், அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் என்.பி.வேல்முருகன், நகர மன்றத் தலைவர் அலெக்சாண்டர், துணை தலைவர் தர்மராஜ், நகர மன்ற உறுப்பினர்கள் பிரகாஷ், சுப்பிரமணி, செல்வம், அன்னக்கிளி, செல்வகுமார், கண்ணன், கதிர்வேல், மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.